




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள், இன்று (08.03.2017) திருநெல்வேலியில் நடைபெற்ற விழாவில் திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் பல்வேறு அரசு துறைகளை சார்ந்த முடிவுற்ற திட்டப்பணிகளை தொடங்கி வைத்து, பயனாளிகளுக்கு நலத்திட்டங்களை வழங்கினார். அதனைத் தொடர்ந்து, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு காணொலிக்காட்சி மூலம், கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், கன்னியாகுமரி மாவட்ட மக்களின் சார்பாக நன்றிகளை தெரிவித்தார்.

செ.வெ.எண்: 173/2017 நாள்: 08.03.2017

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள், திருநெல்வேலியில் நடைபெற்ற விழாவில், கன்னியாகுமரி மாவட்டத்தில் ரூ.22.50 கோடி மதிப்பிலான பல்வேறு அரசு துறைகளை சார்ந்த 174 முடிவுற்ற திட்டப் பணிகளை இன்று (08.03.2017) காணொலிக்காட்சி மூலம் திறந்து வைத்தார்கள்.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள், திருநெல்வேலியில் நடைபெற்ற விழாவில், கன்னியாகுமரி மாவட்டத்தில் ரூ.22.50 கோடி மதிப்பிலான பல்வேறு அரசு துறைகளை சார்ந்த 174 முடிவுற்ற திட்டப் பணிகளை இன்று (08.03.2017) காணொலிக்காட்சி மூலம் திறந்து வைத்தார்கள்.

கன்னியாகுமரி மாவட்டம், திங்கள் சந்தை என்ற இடத்தில் வேளாண்மை துறையில் கன்னியாகுமரி விற்பனை குழுவிற்கு 500 மெட்ரிக் டன் (MT) நெல் சேமிப்பு கிடங்கு ரூ.50 இலட்சத்தில் கட்டி முடிக்கப்பட்டுள்ளதையும், வணிக வரி மற்றும் பத்திர பதிவு துறையின் மூலம் ரூ.1.10 கோடி செலவில் தோவாளை மற்றும் கருங்கல் ஆகிய இடங்களில் கட்டப்பட்டுள்ள சார் பதிவாளர் அலுவலக கட்டிடங்களையும், சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறையின் மூலம் குலசேகரத்தில் ரூ.19 இலட்சம் செலவில் கட்டப்பட்டுள்ள வரவேற்பு மற்றும் விளக்க மையம், பயணிகள் இளைப்பாறும் கொட்டகை ஆகிய கட்டிடங்களையும், ரூ.2.40 கோடி செலவில் கன்னியாகுமரியில் கட்டப்பட்டுள்ள கைவினைப் பொருட்களின் நகர்ப்புற கண்காட்சி திடலையும், காவல்துறையின் மூலம் மூன்று காவல் நிலையங்கள் (வெளிச்சந்தை காவல் நிலையம் , குழித்துறை அனைத்து மகளிர் காவல் நிலையம், சுசீந்திரம் காவல் நிலையம்) மற்றும் இரண்டு காவல்துறை கட்டிடங்கள் (காவல்துறை கண்காணிப்பாளர் வளாகத்தில் ஒருங்கிணைந்த அலுவலக கட்டிடம் மற்றும் காவல் உள்துறை அலுவலக கட்டிடம்) ரூ.5.70 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள கட்டிடங்களையும், தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்பு துறையின் மூலம் கோணம் அரசு தொழிற்நுட்ப கல்லூரியில் ரூ.36 இலட்சம் செலவில் கட்டப்பட்டுள்ள காது கேளாதோர் மற்றும் வாய் பேசாதோருக்கான பொருத்துநர் பணிமனை மற்றும் வகுப்பறை கட்டிடங்களையும், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் மூலம் பத்மனாபபுரம் நகராட்சியில் ரூ.1.50 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள சுகாதார பணியாளர் குடியிருப்புகளையும், ரூ.50 இலட்சம் செலவில் கட்டப்பட்டுள்ள திங்கள்நகர் பேரூராட்சி அலுவலகம் கட்டிடங்களையும், ஊரக வளர்ச்சித்துறையின் மூலம் ரூ.4.92 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள 118 பசுமை வீடுகள், 2 ஊராட்சி ஒன்றிய சேவை மையங்கள், 12 கிராம ஊராட்சி சேவை மைய கட்டிடங்களையும், பள்ளி கல்வி துறையின் மூலம் ரூ.92 இலட்சம் செலவில் கட்டப்பட்டுள்ள ஒரு பள்ளி மற்றும் நூலகம் கட்டிடங்களும், ரூ.36 இலட்சம் செலவில் கட்டப்பட்டுள்ள 15 கூடுதல் வகுப்பறை கட்டிடங்களையும் (Smart virtual class rooms), இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு துறையின் மூலம் கோணம் என்ற இடத்தில் ரூ.1.95 கோடி செலவில் கட்டி முடிக்கப்பட்ட உள் விளையாட்டு அரங்கத்தினையும், அருமணையில் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கத்தின் மூலம் ரூ.10 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ள அம்மா மருந்தகத்தையும்,

கருங்கல், வீர நாராயண சேரி மற்றும் நன்டன்காடு ஆகிய இடங்களில் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கத்தின் மூலம் ரூ.60 இலட்சம் செலவில் கட்டப்பட்டுள்ள கட்டிடங்களையும், நித்தரவிளை, அரும்மணை மற்றும் திட்டவிளை ஆகிய இடங்களில் ரூ.11 இலட்சம் செலவில் புதிய மத்திய கூட்டுறவு வங்கி கிளைகளையும், இந்து அறநிலை துறையின் மூலம் ரூ.1.29 கோடி செலவில் அருள்மிகு நாகராஜா திருக்கோயிலில் (நாகர்கோவில்) உலோக திருமேனிகள் பாதுகாப்பு மையத்தினையும், அகஸ்தீஸ்வரம், அருள்மிகு கிருஷ்ண சாமி திருகோயிலில் அன்னதான திட்டம் மற்றும் ஒரு கால பூஜை செய்யும் திட்டம் என மொத்தம் ரூ.22.50 கோடி மதிப்பிலான பல்வேறு அரசு துறைகளை சார்ந்த 174 பணிகளை இன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள், தொடங்கி வைத்து மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வந்தார்கள்.

அதனை தொடர்ந்து, கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் அலுவலக நாஞ்சில் கூட்டரங்கில், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சஜ்ஜன்சங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில், பசுமை வீடுகள் என்ற திட்டத்தில் பயனடைந்த பயனாளிகள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு தங்களது நன்றிகளை தெரிவித்துக் கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.கு.தர்மராஜன் இ.கா.ப., மாவட்ட வருவாய் அலுவலர் திரு.சோ.இளங்கோ, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் திருமதி.கெட்சி லீமா அமலினி, அரசு அலுவலர்கள் மற்றும் விவசாய பிரதிநிதிகள் பலர் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.